**OS.NO:48/2021.**

**PW 2 : திரு. ராஜசேகர்.**

நாள் : 16.12.2024

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**
**1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

என் தந்தை எனக்கு உசேன் என பெயர் வைத்தார். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் என்னுடை பெயர் ராஜசேகர் என்கிற உசேன் என எங்கும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். என் தாயாருக்கு 1981ல் திருமணம் நடந்தது சம்மந்தமாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். என்னுடைய பிறப்பு சான்று நகலை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். என் தாயாரும், கரிமுதீனும் இரண்டு ஆண்டுகள் எந்த விலாசத்தில் வாழ்ந்தார்கள் என்று வழக்கில், முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், நான் சொல்லியுள்ளேன். என் தாயாருடன் கரிமுதீன் இரண்டு ஆண்டுகள் வாழ்ந்து விட்டு, பிறகு விட்டு விட்டு சென்றது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், புகார் கொடுத்துள்ளோம். நாங்கள் புகார் கொடுத்ததற்கு ஆதரமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். ராணிப்பேட்டையில் இருந்து 2016 ஆண்டு நான் சென்னை சென்று என் அம்மாவுடன் தங்கினேன். நான் பிறந்தவுடன் என் தாயார் ராணிப்பேட்டையில் இருந்து சென்னைக்கு சென்றுவிட்டார். இன்றைக்கும் என் தாயார் சென்னையில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். கரிமுதீன் முத்துக்கடையில் ஓட்டல்நடத்தி, மாதம் இலட்ச

கணக்கில் சம்பாதித்தார் என காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல்



செய்யவில்லை என்றால், சரிதான். எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து, என்னை என் தாயாரும், என் பாட்டியும் என்னை காப்பாற்றி வருகிறார்கள். நானும், என் தாயாரும்தான் சேர்ந்து ஜீவனாம்சம் கேட்டு மாவட்ட உரிமையியில் மற்றும் நடுவர் நீதிமன்றம், ராணிப்பேட்டையில் வழக்கு தாக்கல் செய்தோம். ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்த வழக்கில் என் அம்மா மட்டும்தான் தரப்பினர் என்றால், சரிதான். கரிமுதீனின் மகன் தான் நான் என்று காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் 1998ம் ஆண்டு 8ம் வகுப்பு படித்து முடித்தேன். வா.சா.ஆ.9ல் என்னுடைய பெயர் ராஜசேகர் என உள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.9யை 18.07.2007ல்தான் பள்ளியில் இருந்து பெற்றேன் என்றால், சரிதான். வா.சா.ஆ.9 இந்த வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. கரிமுதீன் இறந்த பிறகு என்னுடைய அப்பா கரிமுதீனின் இரண்டாவது மனைவியிடம் சொத்துக்களில் பாகம் தருமாறு கேட்டேன். அதற்கு முன்பு வரை கரிமுதீனின் மனைவி 1ம் பிரதிவாதியை நான் நேரில் சந்தித்து எதுவும் கேட்கவில்லை என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியை நான் 2017ம் ஆண்டு முதன் முதலாக நேரில் பார்த்தேன். வாரிசு சான்றிதழில் எங்கள் பெயரை சேர்க்கவில்லை என்று நான் மனு கொடுத்தேன். வாரிசு மனு விசாரணையில் எங்கள் தரப்பில் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால், நாங்கள் எங்கள் தரப்பில் தீர்ப்பான உத்தரவு நகலை கொடுத்தோம். வருவாய் கோட்டாட்சியர் ஜீவனாம்ச வழக்கில் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தான் வாரிசு சான்றை இரத்து செய்தார் என்றாலும், மற்ற ஆவணங்களையும் சாட்சியங்களையும் விசாரணை

செய்யாமல் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றாலும், அது



சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் ஊரில் கிராம நிர்வாக அலுவலரையும், சாட்சிகளையும் விசாரணை செய்துதான் உத்தரவு போட்டார். அவ்வாறு வாரிசு சான்று இரத்தான பிறகு, நாங்களும் கரிம்முதீனின் வாரிசு என சான்று எதுவும் கேட்கவில்லை என்றால், கேட்டோம். கரிம்முதீனிக்கு இரண்டு மனைவிகள் என்பதால், நீதிமன்றம் மூலம் சான்று வாங்கிகொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். என்னுடைய வாரிசு சான்றை நிராகரித்ததற்கான உத்தரவு எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், எங்கள் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். கரிம்முதீன் அவருடைய சொத்துக்களை எந்தவித வில்லங்கமும் செய்யாமல் இறந்தார் என காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் கொடுத்துள்ளேன். கரிமுதீன் அவரது சொத்துகளின் பேரில் வங்கியில் கடன் பெற்ற வகையில் ரூ.7 இலட்சம் கடன் இருந்தது என்றாலும், அதை தவிர அவருக்கு வெளிக்கடன்கள் ரூ.15 லட்சம் இருந்தது என்றாலும், அது தவறு. நான் இன்று வரை இந்து மதத்தில்தான் இருந்து வருகிறேன் என்றால், சரிதான். கரிமுதீனின் வாரிசு என காண்பிக்க நான் நீதிமன்றத்தில் ஆவணம்தாக்கல் செய்யவில்லை என்பதாலும், என் தாயாருக்கும் கரிமுதீனுக்கும் திருமணம் நடந்தது என காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், வழக்கில் கோரியபடி பாகம் பெற எங்களுக்கு உரிமை இல்லை என்றால், அது சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

S/d. M.Selvam,
I Additional District Judge,

Ranipet.